ஆண் - பெண்

# பிள்ளைத்தாலாட்டு



கலைமகள் பதிப்பு

...ழுத்துக்காரன் தெரு, சென்னை-19.

1965 ந. பை. 12

0-,81
N65
164521

உ

கடவுள் துணை

# ஆண்பிள்ளைத் தாலாட்டு

**இராகம்-நீலாம்புரி**

ஆராரோ ஆராரோ ஆணரசே ஆராரோ
சீராரு மெங்கள் சிரோன்மணியே ஆராரோ,

நற்கரும்புஞ் சர்க்கரையு நாடும் அமுதமும்போற்
சொற்கவின்செய் முத்தமிழோர் துதிபதியே கண்
[வளராய்
தாய்மார்கள் சீராட்டத் தையனல்லார் தாலாட்ட
ஆயுமணித் தொட்டிலிலே அற்புதனே கண்வளராய்
கின்னரி வாசிக்கக் கிளிகளுடன் பூவைகொஞ்ச
வன்னமணித் தொட்டிலிலே வாழ்வேநீ கண்வளராய்
மாற்றுயர்ந்த தங்க வடம்பூட்டித் தாலாட்டிப்
போற்றி வளர்க்கவளர் புத்திரனே கண்வளராய்
பவள வடம்விளங்கப் பகர்முத்து மாலைதொங்க
நவமணிப்பூந்தொட்டிலேநாரதிபனே கண்வளராய்
நீராட்டி யந்தி நிலாக்காட்டிப் பொட்டுமிட்டுச்
சீராட்டு மெங்கள் சிகாமணியே கண்வளராய்
வெண்ணீறு நெற்றி விளங்கவுங்கண் மைதீட்டி
நண்ண வளர்க்குமெங்கள் நாயகமே கண்வளராய்
தளதளெனுந் தண்டை சதங்கையொடு பாதசரம்
நலின மலர்த் தாளிலங்க நன்மணியே கண்வளராய்
குஞ்சுமணி பொற்சதங்கை கோலமுயர் பொன்னரை
விஞ்சுமொளி வீச விதரணனே கண்வளராய் [நாண்
வைய மதிக்கு மணிக்கடகம் பாட்டிலுடன்
கையிற்பொற் காப்புங் கவின்பெறவே கண்வளராய்

சிறுவிரலிற் பச்சை சிறந்தவயி ரம்பதிக்கப்
பெறுமோ திரங்கள் பிறங்கவே கண்வளராய்
எஞ்சு மிருபுறத்து மிலங்கிரு தலைப்பட்சி [ராய்
கொஞ்சுதல்போல வங்கியுங்கை குலுங்கவே கண்வள

சரப்பளிநல வச்ரமணித் தாழ்வடமுத் தாரம்
திருப்பெறும்வண் மார்பிற் றிகழவே கண்வளராய்
காதில் வயிரக் கடுக்கனுயர் முருகும்
நீதமுடன் விளங்க நிதிபதியே கண்வளராய்.

வங்காள தேசமுன் போய் பாட்டனர் கொண்டுவந்த
சிங்காரக் கொண்டை திகழவே கண்வளராய்
கொற்றவருங் கண்டு குதுகலிக்குஞ் சுட்டிபிறை
நெற்றிதனின் மேவி நிலவவே கண்வளராய்

நிலையேழ்கொள் மாடமதில் நேருமணிக் கூடமதில்
நலமாக வாழு நரேந்திரனே கண்வளராய்
நாளுங் குலஞ்செழிக்க நற்சீர் மனைதழைக்க
வேளெனவே வந்ததவ மெய்ப்பேறே கண்வளராய்

பிள்ளைகலி தீர்க்கப் பெருக்கமுடன் வந்துதித்த
வள்ளலே திவ்ய மரகதமே கண்வளராய்
கொங்கென்று மாறுக் குலமலர்ப்பூங் காவனத்தே
பொங்கமுடன் மேவும் புதுமலரே கண்வளராய்

ஆக்கன் முதல் முத்தொழிற்சௌற்புதனுல் வந்திசை
பாக்கியத்தினல் விளைந்த பாக்கியமே கண்வளராய் [கொள்
தாலமெங் கணுஞ்சீர் தழைத்தோங்க வேயுதித்த
பாலசுந் தரன்மகிழும் பார்த்திபனே கண்வளராய்

ஆன்றோர்க ளெல்லாம் அனுதினம்வந் தாசிசொலத்
தோன்றுநித்ய கல்யாண சுந்தரமே கண்வளராய்
வாடாத பூவே மதுகரஞ்சூழ் பைங்காவே
தேடாத புஷ்பரதக் கோவேநீ கண்வளராய்.

0-81
N65

விண்ணிலுறை தேவேந்தரன் மெய்நடுக்கந்தீர்த்த
மண்ணியன்போல்வந்தமதலையேகண்வளராய் [சுப்ர
நேயமே யின்பே நிறைநேர் நடுநிலையோர்
ஞாயமே கண்ணே நரபதியே கண்வளராய்

தபலட் சணத்தோர் சதாநிதமும் வாழ்த்துஞ்
சுபலட் சணநிறைந்த தோன்றலே கண்வளராய்
ஆரா வமுதே அதிமதுர முக்கனியே
பேராரு மெங்கள் குலப் பேரரசே கண்வளராய்

எத்தேசத் துள்ளவரு மெண்ணி மிகமதிக்கு
முத்தே பவள மென்வாய் முதல்வனே கண்வளராய்
பூங்கா வனத்தளியே புலவர்புகழ் தண்ணளியே
பாங்காருந் தெய்வப் பசுங்கிளியே கண்வளராய்

சிந்தா மணியே தெவிட்டாத தெள்ளமுதே
நந்தா மணிவிளக்கே நட்பேநீ கண்வளராய்
பொற்பா ரதிபதியே பூரண கலாமதியே
சற்பாத் திரர்புகழுந் தயாநிதியே கண்வளராய்

கண்ணே கருணைக் கடலே யிசைக்குயிலே
பண்ணே யினிய பழமேநீ கண்வளராய்
தித்திக்குஞ் செங்கரும்பே சீனிச் சர்க்கரையே
எத்திக்கும் போற்றும் இலஞ்சியமே கண்வளராய்

கன்னல்விற்கை மன்மதனும் கட்டழகைக் கண்டு
பின்னமுற்று னெஞ்சுப் பிரமணியே கண்வளராய் [வெட்கி
தாயாரும் பாலூட்டத் தந்தையுமே பக்கலுற
ஓயாக் கவலையென்ன வுத்தமனே கண்வளராய்

மேவுமொரு நாளையிலே வேணபல வேளையிலே
கூவி யழுவதென்ன கொற்றவனே கண்வளராய்
ஆம்பலசொல் கேளாமல் ஆம்பல்மலர் வாய்திறந்து
தேம்புவதேன் தெய்வ சிகாமணியே கண்வளராய்

சுற்றிபுலியால்வெருண்டாய்துற்பூதத்தால்மருண்டாய்
நெற்றியில்வெண் ணீறிடுவேனிருபனே கண்வளராய்
உரத்த புலியதையும் ஒண்புழக்கை யானையையும்
துரத்திவிட்டேன் ஆரமுத சோமனே கண்வளராய்

பூனையைநீ கண்டு பொருமி யழவேண்டாம்
ஈனமற வோட்டிவிட்டே னின்னமுதே கண்வளராய்
அக்காள் அடித்தாளோ அம்மான்மார்வைதாரோ
மிக்காகத் தேம்புவதேன் வித்தகனே கண்வளராய்

நீளும் பெருவாழ்வு நினைக்கென்ன சொற்றாழ்வு
நாளும் வளமோங்கு நவமணியே கண்வளராய்
கட்டிகருப் பூரங் கனகதட்டிலேற்றிவைத்து
திட்டி கழிக்குமுன்னே தினகரனே கண்வளராய்

மெல்லியர்கை கால்பிடித்து மெல்ல மருந்தளிப்பார்
அல்ல லுறாமல் அருந்தவனே கண்வளராய்
வட்ட முலைதிறந்து மங்கையரும் பால்கறந்தே
இட்டமுட னீவா ரிரஞ்சிதமே கண்வளராய்

தங்கத்தா லானைகளுந் தந்தத்தி னற்பரியும்
இங்கிதமின் னரளித்தா ரிளங்கதிரே கண்வளராய்
பாட்டனார் பாட்டியுமே பலகாரங் கொண்டுவந்தார்
வாட்டமேன் சூடா மணியேநீ கண்வளராய்

தாம மலர்மாலை சரப்பளியும் அம்மான்மார்
தாமதமில் லாதளித்தார் சற்குணனே கண்வளராய்
சித்திரஞ்சேர் வேலைமிகத் தீர்ந்ததங்கப் பாப்பாசும்
அத்தைமார் வாங்கிவந்தார் ஆதவனே கண்வளராய்

எழுதப்பொன் னேலை யெழுத்தாணியுமிந்த
பொழுதே தருவேன் புரந்தரனே கண்வளராய்
பொற்சரிகைக் குல்லாவும் பொற்சரிகை யங்கிகளும்
நற்குடையுஞ் சொக்காயு நல்குவேன் கண்வளராய்

அத்தைமகளும்வந்தாள் அத்தையார் தானும்வந்தாள்
மெத்த மகிழ்ச்சியுடன் விஜயனே கண்வளராய்
வாச மலரெடுத்து வாசிகையா கத்தொடுத்து
நேசமுடன் மாமிதந்தாள் நித்திலமே கண்வளராய்

மணங்கொள் பனி நீராட்டி மல்லிகைப்பூ மேற்சூட்டி
யிணங்க வளர்க்குமெங்களிளங்குருந்தே கண்வளராய்
தாயாரு மன்புபெறத் தாதை யுளங்களிக்கக்
சேயாக வந்துதித்த செஞ்சுடரே கண்வளராய்

ஓசைக் குயில்கூவ வுவந்துமயில் கூத்தாட
நேசக்கிளிகள் கொஞ்ச நிலைவிளக்கே கண்வளராய்
கக்கசீர்க் கற்பகமே சாதிநறுஞ் சண்பகமே
கெக்கலிக்கு நற்சுகமே கிஞ்சுகமே கண்வளராய்

ஆராரோ ஆராரோ ஆணரசே ஆராரோ
சீராரு மெங்கள் சிரோன்மணியே ஆராரோ

ஆண்பிள்ளைத் தாலாட்டு முற்றிற்று.

உ

கடவுள் துணை

# பெண்பிள்ளைத் தாலாட்டு

**இராகம்-நீலாம்புரி**

ஆராரோ ஆராரோ ஆரணங்கே ஆராரோ
பேராருமெங்கள் தவப் பெண்மணியே ஆராரோ

பூமிபுகழ் தெய்வப் புலவர்துதி மன்னுகந்த
சாமியருளென்னவளர் சற்குணியே கண்வளராய்

அன்னைமார் சீராட்ட அழகுநல்லார் தாலாட்ட
பொன்னின்மணித்தொட்டிலிலே பொற்கொடியே கண்வள
பண்ணிக்கிசைந்திலங்கும் பாவே செழுங்காவே [ராய்
வண்ணமுயர் மாதாவே வாழ்வே நீ கண்வளராய்

வாணட்சி மேவசுரர் வந்துதிக்குந் தென்மதுரை
மீனட்சி யின்கிருபை மேவுமின்னே கண்வளராய்
பூவுலகத் துள்ள பொருந்ததிசர் மேலோர்கள்
ஆவலுடன் வாழ்த்தும் அருந்ததியே கண்வளராய்

ஒப்பிலா தோங்கும் ஒளிர்ஜீவ ரத்தினமே [ராய்
முப்பார்சொல் பெண்ணனமே மோகனமே கண்வள
செம்பவள வாயார் தினமும் புகழ்ந்துரைக்கும்
விம்பவள மேவும் விதுமுகத்தாய் கண்வளராய்

அமையந்தி வான்பிறைநே ராருமணிநனுநற்
றமையந் தியுமகிழுஞ் சம்பனியே கண்வளராய்
ஒண்ணுதலா ரிந்த்ராணி யோதுமுயர் சர்வாணி
கண்ணன் மதிக்குநித்ய கல்யாணி கண்வளராய்

பாதசரந் தண்டை பளபளென நிண்பதத்தே
சோதி மிகவிளங்கச் சுந்தரியே கண்வளராய்
அரசிலையைப் போலு மமைந்த அரைமூடி
வரிசைமணி சேர்ந்து வயங்கவே கண்வளராய்

பொற்காப்பும்பொற்கொலுசும்பொருந்துமணிவளையு
விற்காணும் வாங்கியுங்கை மேவவே கண்வளராய் [ம்
நத்தும் புலாக்குமலர் நாசியினும் பாவல்செவி
மெத்த வொளிவீச விதரணியே கண்வளராய்

தேங்குபுக ழூத்தூர் திகழ் சுப்ப ராயபிள்ளை
வாங்கிநல்கு முத்துவட மார்பசையக் கண்வளராய்
சீர்கொண்ட குப்பி சிகைத்தாடு பில்லைகுச்சும்
ஏர்கொண்டுயர் சிரத்தி லிசைந்திடவே கண்வளராய்

சம்பீர மென்கனியின் றன்வண்ண மேலிலங்கக்
கெம்பீர மேவுசொர்ணக் கிளியேநீ கண்வளராய்
மண்பிசைந்தே யுண்டநெடுமான் மயங்வந்தமின்னே
கண்பிசைந்தே யுள்ளங் கலங்குவதேன் கண்வளராய்

அத்தான் வந் தேசினரோ ஆகடியம் பேசினரோ
எத்தால் மனவருத்தம் ஏந்திழையே கண்வளராய்
சேலுங் கடலுநிகர் சீர்விழிமை இட்டிமுலைப்
பாலுங் கொடுத்தேன் பசுங்கிளியே கண்வளராய்

மட்டிலாப் பூண்பூட்டி மதிநுதலிற் செந்திலகப்
பொட்டுமிட்டேன்சீர்வசந்தப்பூங்குயிலேகண்வளராய்
சத்தியவான் கோவிந்த சாமியின்றன்ஷாப்பினிலே
குத்தினிபா வாடைவிற்குங் கொண்டீவேன் கண்வளராய்

வீதியினிற் சுவாமிவெகு வேடிக்கை யாகவருந்
தாதியர் காண்பிப்பார் தவப்பேறே கண்வளராய்
பொன்னு லமைந்தொளிரும் பூங்குடமும் ஸ்ரீபடமும்
நன்னயஞ்சேர் அத்தைதந்தாள் நாயகமே கண்வளராய்

தங்கத்தி னூறியுந் தனிவயிரச் சொப்புகளும்
பொங்கமுடன் பாட்டிதந்தாள் பூவையேகண்வளராய்
தரைமெழுகி யுண்டுபெருந் தவமிருந்தும் பெற்ற
நிறைவடிவு மேவுமெங்கள் நித்திலமே கண்வளராய்

விண்ணவ ரென்றென்றும் விரும்புஞ் சுவையமுதே
நிண்ணயமா யோங்குசங்க நிதியேநீ கண்வளராய்
ஓடாத மானே திகட்டாத செந்தேனே
நீடாழி சூழ்புவியோர் நிதியமே கண்வளராய்

கோமேதகமே குறைவிலா வித்தகமே
மாமேவு தெய்வ மணிவிளக்கே கண்வளராய்
கண்ணான கண்ணே கருத்துக்கிசைந்த பண்ணே
பெண்ணான பெண்ணேயென் பெண்ணரசே கண்வள
[ராய்

பொற்றா மரைமேவும் பொன்னமே மின்னினமே
நற்றாமஞ்சூடும் நவமணியே கண்வளராய்
வணஞ்சேர்நன் னேத்திரமே வாணர்புகழ் சூத்திரமே
குணஞ்சேர்சற் பாத்திரமே கோமளமே கண்வளரா

பாரதியே சுத்த பவித்திரபா கீரதியே
மாரதியே சீரதிகம் வாய்ந்தமின்னே கண்வளராய்
மன்பார்சொ லெவ்வுள் வருராம சாமியின்வாக்
கின்பாகக் கேட்டவற்கு மிளங்குருந்தே கண்வளரா

ஆராரோ ஆராரோ ஆரணங்கே ஆராரோ
பேராருமெங்கள் தவப் பெண்மணியே ஆரா

பெண்பிள்ளைத் தாலாட்டு


முற்றிற்று.

அச்சகம், காலடிப்பேட்டை, சென்னை-19

## ஸ்திரீ புருஷர்

# ரேகைசாஸ்திரம்

வி. ஏ. தியாகராஜன் எழுதியது




அநேகப்படங்கள் அடங்கிய ரேகைசாஸ்திரம் வசனநூலறிவினால் ஆயுள், விவாகம், லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், மரணம், இல்லறசுகம், சௌக்கியம், காரியசித்தி, பேரின்பம், வஞ்சம், அபாயம், வியாதி, ஜயம், அபஜெயம், கண்டம், ஐவரியம் முதலிய விஷயங்களடங்கியுள்ளன. இதை ஸ்திரீ புருஷர் தாமாகவே அவர்கள் கையிலுள்ள ரேகையை பார்த்து பலாபலன்களை தெரிந்துக்கொள்ளலாம் அன்றியும் விதியின் பலனையும் வாழ்க்கையின் இரகசியங்களையும் வெளிபடுத்துகிற தோழனாக இருக்கும். அன்பர்கள் ஒருமுறைவாங்கி படித்தால்தான் தெரியும் அனேகமாக பெண்களுக்கு ரேகையினுடைய பலன்களை தெரியபடுத்தும்நூல்வெளிவந்ததில்லை எமதுஸ்திரீ புருஷர் ரேகைசாஸ்திரத்தில் இருவருக்கும் கையிலுள்ள ரேகையினுடைய பலனை தெரியபடுத்தி இருக்கிறோம்.

விலை ரூபா 2-00 தபால் செலவு 90. ந. பை.

---

கிடைக்குமிடம்: **T. R. பாலகிருஷ்ண முதலியார்,**

புத்தக வியாபாரம்

(ஸ்ரீலக்ஷ்மி காலண்டர் & கோ மாடியில்)

நெ-66, மலையபெருமாள் தெரு, சென்னை-1